முருகப்பெருமான் துணை

**மகான் அகத்தியர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.12.2023**, வெள்ளிக்கிழமை

1. கலியினில் துன்பங்கள் தனை
கட்டுக்கடங்கா மாயை வழி
அழிவுற மக்கள் அடைவரென
அறிந்துமே மக்களின் மேலான
2. மேலான அன்பின் வெளிப்பாடாக
மேலவர்கள் மகா சக்திகள் வழி
காலமதில் பலபிறவி தானடைந்து
கட்டுக் கோப்பான மகா சக்திகளை கூட்டி
3. கூட்டியே வேலவன் சக்திபட
குருவரங்கனாக அவதாரம் எடுத்து
கட்டம்பல விரட்டி கலியினில்
காக்கவந்த ஆறுமுக ஞானியே
4. ஞானியே சோபகிருது தேள்திங்கள்
நன்மைபெற இருபான் நவ திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 29 ம் நாள், 15.12.2023, வெள்ளிக்கிழமை)
இனிமைபட அகத்தியரும் துல்லிய ஆசி
இவ்வுலகம் நலம் காணவுரைப்பேன்
5. காணவே வேலவனார் அவதார
கருணைமிக்க ஞானியரின்
ஞான அவதாரம் தன்னை உலகே
நன்மை அடைய வேண்டி நிகழ்த்தி இருக்க
6. இருக்கவே மற்ற குருமார்கள் போல
யோக ஞான தியான வழிகாட்டல் மட்டும் அல்ல
வருத்துகின்ற வினை விரட்டியே
வருவோரை தேற்றுவது மட்டுமல்லாது

7. ஆதரவாய் அவர்வழி குடியோருடன்
அகிலத்தையே மாற்றும் வண்ணம்
மேதகுநிலை கொண்ட குருவாகும்
மேலான ஆதிக்கம் செலுத்தி
8. செலுத்தி உலகை மக்களை
சேதம் செய்கின்ற எதுவானாலும்
வலுவிழந்து அவைகள் எல்லாம்
வகையறியா விரட்டி காத்து
9. காத்து உலகையே மீட்டு
கலியினில் வாட்டமில்லையென
உத்தம நிலைதனை பெருக்கி
உயர்வான ஞானயுகமாக மாற்றி
10. மாற்றி அற்புதம் படைக்கவந்த
மகா பலமிக்க அவதாரமிது
ஆற்றல்பட வந்து சென்றோமென
அல்லாமல் அழியாமை படைப்பதே நோக்கமாகும்
11. ஆகவே உலகோர் அரங்கமகான்
அவதார மகிமை அறிந்து வர
யுகமாற்றம் நிகழ்த்தி உலகினில்
உயர்ஞான ஆட்சிபடைக்க நேரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–